க.சபாபதி, பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
கோவை மண்டலம்,
மாநகராட்சி வணிக வளாகம்,
டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோவை - 18.

தலைவர் அவர்கள்,
வடக்கிபாளையம் ஊராட்சி,
பொள்ளாச்சி வட்டம்,
கோவை மாவட்டம்.

ந.க.எண்.3057/2012 கோம 4

திருவள்ளுவர் ஆண்டு 2044,
நந்தன வருடம் மாசி ,
நாள் : 13.02.13

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - நகர் ஊரமைப்புத் துறை - கோவை மண்டலம் - கோவை மாவட்டம் - பொள்ளாச்சி வட்டம் - வடக்கிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண். 303/1A -ல் 5.16 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குவது - தொடர்பாக.

பார்வை :
1) தலைவர், வடக்கிபாளையம் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள் 30.8.2012
2) மனுதாரர் திரு.எஸ்.தியாகராஜன் (ம) ஏ.இளங்கோவன் அவர்களின் கடிதம் நாள் : 06.02.13.
3) அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி துறை, நாள்: 16.6.2003
4) இவ்வலுவலக சுற்றறிக்கை எண். 3210/02 கோம-2, நாள் : 06.11.02
5) வட்டாச்சியர் பொள்ளாச்சி வட்டம் சான்று ப.மு.எண். 15767/ ஆ2/2012/ நாள் : 08.08.12

------

பார்வை 1 -ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

கோவை மாவட்டம் , பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண். 303/1A -ல் 5.16 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேசிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பேரில் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.6.03-ன்படி நில உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாகமே பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் (EXECUTIVE AUTHORITY) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின்பேரில் இத்தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

Scanned by CamScanner

ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு ம.வ/(கோம)எண்.19/2013 என் எண்ணிடப்பட்டு மூன்று நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், பார்வை 3 மற்றும் 4 ஆகியவற்றில் சுட்டியுள்ள அரசாணை மற்றும் இவ்வலுவலக சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன்படி பூங்காவிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் மனுதாரரால் தானப் பத்திரம் மூலம் வடக்கிபாளையம் ஊராட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை 19(இ) 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் அளிக்க வேண்டும்.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி உள்ளாட்சி மன்றத் தீர்மானம் மற்றும் அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
கோவை மண்டலம்

13/2/13

<u>இணைப்பு</u>

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனை - 3 நகல்கள்.

<u>கடித நகல்</u>

நகர் ஊரமைப்பு ஆணையர் (வரைபடம் மற்றும் நிபந்தனையுடன்)
சென்னை - அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>நகல் - மனுதாரர்</u>
திரு. S. தியாகராஜன்,
திரு. A. இளங்கோவன்,
11-19 அருமை நாயக்கன் புதூர் கிராமம்
ஜெகதாபி
கரூர்.

Scanned by CamScanner